DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **Spl.S.C.No. 2 of 2024** |
| **Deposition of witness for** | **:** | **PW- 2** |
| **Name** | **:** | நாகம்மாள் |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**10.9.2025**

**முதல் விசாரணை:**

நான் கிருஷ்ணாபுதூரில் குடியிருக்கிறேன், நான் வீட்டு குடித்தனமாக இருக்கிறேன். அ.சா.1 புவனேஷ்வரி என் மகளாகும். எனக்கு புவனேஷ்வரியும், பூர்ணிமாவும் குழந்தைகள் ஆகும். நான் இந்து சக்கிளியர் ஜாதியை சேர்ந்தவர். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் எதிரி தர்மனை தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அப்போது என்னை போலிசார் விசாரித்தார்கள். எனக்கு அரசாங்கத்திடம் இருந்து இழப்பீடு வழங்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, நீதிமன்றம் அதற்கு அனுமதி அளித்ததன் பேரில், அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

நான் போலிசார் விசாரணையில் 27.3.2024ஆம் தேதி காலை 10.00 மணிக்கு எங்கள் வீட்டிற்கு பின்புறம் குடியிருக்கும் ஆஜர் எதிரி தர்மன் எங்களுக்கு சொந்தமான பொது ஓட்டு சுவரில் ஆட்களை வைத்து புதிதாக செங்கல் கட்டிடம் கட்டி கொண்டிருந்தார் என்றும், அதை பார்த்த நான் எதிரி தர்மனிடம் எங்களிடம் கேட்காமல் பொது சுவரில் புதிதாக கட்டிடம் கட்டுகிறாய் என்று கேட்டதாகவும், அதற்கு எதிரி தர்மன் என்னை பார்த்து கெட்ட வார்த்தைகளாலும், ஜாதியை சொல்லியும் தேவிடியா, சக்கிளிய நாயே என்று திட்டி தனது கையால் என் தலை மற்றும் முதுகில் அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும், அதனால் எனக்கு கை, முதுகு மற்றும் தலை பகுதிகளில் அடிப்பட்டதாகவும் சொல்லிவிட்டு, தற்போது நாங்களும், எதிரியும் சமாதானமாகிவிட்டதால், எதிரியை காப்பாற்றுவதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

இல்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.09.10 16:40:10 +0530